**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 171 /2019**

**Deposition of P.W. 1**

**Name** : திரு. ஜெயச்சந்திரன்

**S/o, D/o, W/o** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of**

**Dated:**04.12.2024

**A1, A6, Present, A2 to A5 absent. Petition filed and allowed.**

<u>முதல் விசாரணை–</u>

நான் தற்போது சென்னை ஏழுகிணறு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 08.02.2016ம் தேதி கோட்டார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல்நிலைய குற்ற எண்.90/2016 பிரிவுகள் 387, 506(2) இ.த.ச வழக்கில் விசாரணை அதிகாரி ஆவேன். அந்த வழக்கின் எதிரி அபுபக்கர் சித்திக் என்பவரை 08.02.2016 தேதிமாலை 05.30 மணிக்கு கைது செய்த போது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 01.09.2015ம் தேதி அன்று இ,ரவு 08.00 மணியளவில் திருவிதாங்கோடு நடுக்காட்டுபள்ளி கிரவுண்டில் வைத்து நசீர் தலைமையில் கூட்டம் போட்டதாகவும் அந்த கூட்டத்தில் பி.ஜே.பி கட்சியை சேர்ந்த நபரையும், இந்து மகா சபை கட்சியை சேர்ந்த

நபரையும் கொலை செய்ய வேண்டுமென்றும் அவர்கள் அடிக்கடி முஸ்லீம் மதத்தை சேர்ந்த ஆட்டோ ஓட்டுனர்களை பிரச்சனை செய்வதால் அவர்களை தாக்கல் செய்ய வேண்டுமென்று சதி திட்டம் தீட்டியதாக என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி 01.09.2015ம் தேதி நடைபெற்ற சம்பவத்திற்காக நடவடிக்கை எடுக்க அன்று மாலை 16.00 மணிக்கு தக்கலை காவல்நிலையத்தில் புகார் மனு எழுதிக்கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. குற்ற எண்.90/2016 வழக்கில் எதிரி அபுபக்கர் சித்தீக் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.2.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.சா.ஆ. 1 புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் எதிரிகளால் எனக்கு தீங்கு ஏற்பட்டதாக குறிப்பிடவில்லை. புகாரில் யார் முன்னிலையில் அபுபக்கர் சீத்தீக்கை கைது செய்தேன் என்று குறிப்பிடவில்லை. 08.02.2016ம் தேதி கொடுத்த புகாரின் படி தான் சாட்சியம் அளிக்கிறேன். அதன் பிறகு நான் வேறு புகார் எதுவும் கொடுக்கவில்லை. அபுபக்கர் சீத்தீக்கை கைது செய்த விதம் பற்றி புகாரில் குறிப்பிடவில்லை. எதிரிகள் மீது தக்கலை காவல்நிலையத்தில் வேறு புகார்கள் உள்ளதா என்று எனக்குத் தெரியாது. I.N.D.J அமைப்பு தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. சம்பவ இடத்தை நான் பார்க்கவில்லை. 01.09.2015ம் தேதி நடைபெற்றதாக சொல்லப்படும் கூட்டத்தை யார், யார் பார்த்தார்கள் என்று புகாரிலும், போலீசார் விசாரணையிலும் நான் கூறவில்லை. 01.09.2015 தேதியில் நடைபெற்றதாக கூறப்படும் கூட்டம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. 01.09.2015ம் தேதி நடைபெற்றதாக சம்பவம் பற்றி வேறு நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை 01.09.2015ம் தேதி நடைபெற்றதாக சம்பவம் பற்றி வேறு ஆவணங்கள் எதுவும் நான்

தாக்கல் செய்யவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர மேற்படி சம்பவம் தொடர்பாக வேறு ஆவணங்கள் இல்லை. புகார் கொடுக்க எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் என்ற முறையில் தவறான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் அபுபக்கர் சித்தீக்கை நான் கைது செய்யவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.